U/s. 173 BNSS

# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8120330

1. District : மாவட்டம் சிவகங்கை  PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year: ஆண்டு 2025  FIR No.: மு.த.அ. எண் 03/2025  Date: நாள் 11/04/202

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988  Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: as amended by the P.C. (Amendment) Act  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 07/04/2025  Date to : நாள் வரை 08/04/2025
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 1330 hrs  Time to : நேரம் வரை 1330 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11/04/2025  Time : நேரம் 0900 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II  Time : நேரம் 0930 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 km தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி நகராட்சி அலுவலகம், தொண்டி ரோடு, சிவகங்கை
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. கணேசன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மெய்யப்பன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் அரசு ஊழியர் பணி ஓய்வு  (g) Address : முகவரி 8A. தன்னாசி தெரு, மாலைகண்டான், வெற்றியூர் அஞ்சல், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. U. முருகன், Bill collector, நகராட்சி அலுவலகம், சிவகங்கை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 11.04.2025 தேதி காலை 09.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், வெற்றியூர் அஞ்சல், மாலைகண்டான், அம்மன் சன்னதி தெரு, 8A என்ற முகவரியில் வசிக்கும் மெய்யப்பன் என்பவரின் மகன் திரு.M.கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சி அலுவலக Bill Collector திரு.பாலமுருகன் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................oh point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11/04/2025

A. Kannan
DSP/VAC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 11/4/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A. கண்ணன்,
Rank: நிலை காவல் துணை கண்காணிப்பாளர், No. எண் ......
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சிவகங்கை

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.03/2025 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

11.04.2025-ம் தேதி 09.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.03/2025 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் M.கணேசன், த/பெ.மெய்யப்பன், 8A, அம்மன் சன்னதி, கீழத்தெரு, மாலைகண்டான், வெற்றியூர் அஞ்சல், காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம், **பெறுநர்** திரு.காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை மாவட்டம். ஐயா, நான் வெற்றியூர் மாலைகண்டான் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அந்தமான் தலைமை செயலகத்தில் உதவி செயலராக பணிபுரிந்து கடந்த 2006ல் பணி ஓய்வு பெற்றேன். எனது மனைவி திருமதி.மல்லிகா அந்தமானில் உள்ள போர்ட்பிளேர் நகராட்சியில் தலைமை எழுத்தராக கடந்த 2024ம் ஆண்டில் பணி ஓய்வு பெற்று, தற்போது அங்கு வசித்து வருகிறார். எங்கள் சொந்த ஊர் மாலைகண்டான் ஆகும். நாங்கள் அவ்வப்போது இங்கு வந்து செல்வோம். எனது மனைவி திருமதி.மல்லிகா கடந்த 19.02.2025ம் தேதி சிவகங்கை, செந்தமிழ் நகரில் கீழ்தளம் மற்றும் மேல்தளத்துடன் கூடிய, ஏற்கனவே கட்டியிருந்த வீட்டை திருமதி.சந்திரா (லேட்) என்பவரின் வாரிசுகளான திருமதி.சசிகலா மற்றும் திரு.கோபிநாத் ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றார். அந்த வீட்டிற்கான கதவு எண்கள் 23/6D2A மற்றும் 23(1)/6D/2A ஆகும். இந்த வீட்டிற்கு எனது மனைவி பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய வேண்டி சிவகங்கை நகராட்சி அலுவலகத்திற்கு கடந்த 07.04.2025ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் நான் நேரில் சென்று, பெயர் மாற்றத்திற்கான உரிய ஆவணங்களோடு மனு செய்ய சென்றேன். அப்போது அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது, மனுவினை அலுவலக தபால் பெட்டியில் போட வேண்டும் என்று சொன்னதால், நான் மனுவினை அலுவலக தபால் பெட்டியில் போட்டேன். அப்போது Bill Collector Balamurugan என்பவர் வந்தார். அங்கிருந்தவர்கள் அவர்தான் அந்த ஏரியாவிற்கான Bill Collector பாலமுருகன் என்றும், அவரை பார்த்து விபரம் கேட்டுக்கொள்ளுமாறும் சொன்னார்கள். நான் அவரிடம் சொத்து வரி பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டபோது, நான் அலுவலக தபால் பெட்டியில் போட்டிருந்த என்னுடைய மனுவினை எடுத்து பார்த்துவிட்டு, இதற்கு சொத்து வரி செலுத்த வேண்டும் என்று சொல்லி ரூ.2000/-த்தை என்னிடமிருந்து பெற்று, அவரே வசூல் மையத்திற்கு சென்று, பணத்தை

செலுத்தி அதற்குண்டான ரசீதினை என்னிடம் கொடுத்தார். பின்னர் அவர் என்னிடம், எனது சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான மனு தன்னிடம் தான் வரும் என்று சொல்லி, எனது மனைவி பெயரில் சொத்து வரி மாற்றம் செய்வதற்கு ரூ.20,000/- கொடுங்கள் என்று கேட்டார். நான் அவரிடம், நான் தான் வரி கட்டிவிட்டேன் அல்லவா, எதற்கு (20,000/-) என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் இந்த பணம் எல்லாரும் கொடுக்கறதுதான், நீங்கள் கிரையம் வாங்கியுள்ள வீடானது கீழேயும், மேலேயும் சேர்த்து 2 வீடு இருக்கு, பழைய வீடுனு சொல்றீங்க உங்களுக்காக வேணும்னா ரூ.10,000/- குறைத்துக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் வீட்ல கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 08.04.2025ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் சிவகங்கை நகராட்சி அலுவலகத்திற்குள் சென்றபோது, என்னைப்பார்த்துவிட்டு, மேற்படி Bill Collector பாலமுருகன் என்னிடம் வந்து, வாங்க வெளியில் தனியாக பேசுவோம் என்று சொல்லி, அவரது இருசக்கர வாகனத்தில் என்னை ஏற்றிக்கொண்டு, சிவகங்கை ரயில் நிலையத்திற்கு அழைத்துச்சென்று, அங்கு என்னிடம், பணம் கொண்டு வந்திருக்கிறீங்களா என்று கேட்டார். நான் அவரிடம், பணம் இன்னும் ரெடிபண்ணலை, நீங்க கேட்ட பணம் ரெம்ப அதிகமாக தெரியுது, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு நான் கேட்டதனால், அவர் கேட்ட ரூ.10,000/-ல் (பத்தாயிரத்தில்) ரூ.1000/-த்தை குறைத்துக்கொண்டு ரூ.9000/-த்தை மறுநாள் புதன்கிழமை கொண்டு வருமாறு தெரிவித்தார். அதற்கு நான் சொந்த வேலையாக நான் தேவகோட்டை செல்ல வேண்டியிருப்பதால், என்னால் புதன்கிழமை வர இயலாது என்று சொன்னேன். அதற்கு அவர் வியாழக்கிழமை அரசு விடுமுறை என்றும், 11.04.2025ம் தேதி வெள்ளிக்கிழமை பணத்துடன் வருமாறு தெரிவித்தார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனது மனைவி பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.9000/- கேட்ட Bill Collector பாலமுருகன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள sd.xxxxx (Balamurugan).

Sir, Received the complaint on 11.04.2025 at 09.00 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the

matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.03/2025 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 11.04.2025 at 09.30 hrs and took up for investigation. sd. A.Kannan, Inspr./V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A.Kannan
Inspr/V&AC
Sivagangai
11/4/2025